Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily


மலர் 10
இதழ் 52
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 20 முஹறம் 3 செவ்வாய்க்கிழமை (2-4-68)




### அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு

# ஜோன்ஸன் மீண்டும் போட்டியிடமாட்டார்



## வியட்னும் குண்டு வீச்சிலும் திடீர் மாற்றம்

வாஷிங்டன், ஏப். 1

**அமெரிக்கஜனாதிபதி ஜோன்ஸன்மீண்டும்ஜனாதிபதிதேர்தலில் போட்டியிடமாட்டார். இந்த முடிவு உறுதியானதென்று அறிவித்துள்ளார்.**

வியட்னுமின் பெரும் பகுதிகளில் அமெரிக்க குண்டுவீச்சை உடன் நிறுத்தும்படியும் திரு. ஜோன்ஸன் உத்தரவிட்டு, தாம் பதவியிலிருக்கப் போகும் அடுத்த 9 மாத காலத்தில் வியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு நாட்டு மக்களுக்கு விடுத்த டெலிவிஷன் ஒலிபரப்புச் செய்தியின் இறுதியில் அவர் இவ்வாறு அறிவித்திருந்தார். அவரது இந்த அறிவிப்பு பலத்த வியப்பை அளித்தது.

அமெரிக்க மக்களின் ஒற்றுமையைப் பாதுகாக்கவே தாம் ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதில்லையெனத் தீர்மானம் செய்துள்ளதாகத் திரு. ஜோன்சன் மேலும் அறிவித்துள்ளார்.

தமது ஜனநாயகக் கட்சியிடமிருந்து ஜனாதிபதி பதவிக்கான நியமனத்தை ஏற்றுக் கொள்ளவோ அல்லது கோரவோ போவதில்லை எனத் திரு. ஜோன்சன் கூறினார்.

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டபோது உப ஜனாதிபதியாகவிருந்த திரு. ஜோன்சன், நவம்பர் 23, 1963-ல் திரு. கென்னடியின் இடத்தில் நியமிக்கப்பட்டார்.

பின்னர். 1964 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், குடியரசுக்கட்சியைச்சேர்ந்த திரு. கோல்ட் வாட்டரைத் திரு. ஜோன்சன், 1கோடியே 60 லட்சம் அதிகப்படி வாக்குகளால் தோற்கடித்தார்.

திரு. ஜோன்சன் தாம் ஜனாதிபதிப் பதவிக்கு நிற்கப்போவதில்லைஎன்றுமுடிவு செய்திருப்பதைத் தொடர்ந்து, இப்போது ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி நியமனம் கோருபவர்கள் இருவர்களேயாவர். அவர்கள் செனேட்டர்கள் றொபேட் கென்னடியும், மக்கார்த்தியுமாவர்.

திரு. ஜோன்சன்' ஜனாதிபதிப் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதில்லை என்று அறிவித்துள்ளதாக இன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஊர்ஜிதம் செய்தது.

(விபரம் 3-ம் பக்கம்)

## உலக நாடுகள் வரவேற்பு

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் வியட்னுமில் குண்டுவீச்சை நிறுத்தும்படி உத்தரவிட்டதைத் தொடர்ந்து அங்கு பொதுமக்கள் அதிகமாக குடியிருக்கும் பகுதிகளில் குண்டுவீச்சு நடைபெறவில்லை.

குண்டுவீச்சை நிறுத்த திரு. ஜோன்ஸன் விடுத்த திடீர் உத்தரவு குறித்து உலக நாடுகள் பலவும் வரவேற்புத் தெரிவித்துள்ளன. பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் திரு. ஜோன்ஸனின் இந்த உத்தரவை வரவேற்று கருத்துக்கள் வெளியிட்டுள்ளன. இந்த முயற்சி வியட்னுமில் நிரந்தர குண்டு வீச்சை நிறுத்துவதற்கும், அமைதியை ஏற்படுத்துவதற்கும் வழி வகுக்குமென்று அவை அபிப்பிராயம் தெரிவித்தன.

[எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர்பரீட்சைக்கான 'பொது அறிவும் உள்ளூர் அறிவும்' மாதிரி வினா விடைகளை 6-ம், 7-ம் பக்கத்தில் பார்க்க]

## 4-ந் திகதி வரை தொடர்ந்து றிமாண்ட்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொட்டடி பலாத்காரப் பிரயோகம் சம்பந்தமாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் தொடர்ந்து இம்மாதம் 4-ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் கடந்த வாரம் சரணடைந்த போது இவர்களை கடந்த 31-ந் திகதி வரை றிமாண்டில் [illegible]பட்டிருந்தது. (கா நி)

## கச்சதீவு பற்றி இந்தியா முழுமையாக ஆராய்கிறது

### பிரதமர் இந்திரா அறிவிப்பு

புதுடில்லி' ஏப். 1

கச்சதீவு விவகாரம் குறித்து இன்று மீண்டும் இந்திய பார்லிமெண்டில் பிரச்னை கிளப்பப்பட்டது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. மதுலிமையே கச்சதீவு விஷயமாக பிரதம மந்திரி சபையில் இரண்டு தடவைகள் தவறான கருத்துகளை வெளியிட்டுள்ளார் என்று குற்றஞ் சாட்டினார்.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி பதிலளிக்கையில் எதிர்க்கட்சி அங்கத்தவரின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றார்.

கச்சதீவு விவகாரம் குறித்து அரசாங்கம் முழுமையாக பரிசீலனை செய்து வருகின்றது. ராமநாதபுரம் மகாராஜா அனுப்பியுள்ள தஸ்தாவேஜுகள் உட்பட பல்வேறு பட்ட தஸ்தாவேஜுகளும் ஆராயப்படுகின்றன வென்று பிரதமர் கூறினார்.

### தமிழக மாணவ — தொழிலாளர் கைகலப்பு

## நீதி விசாரணைக்கு தனிநபர் கமிஷன் நியமனம்

### பகிரங்க விசாரணை அவசியம் என்கிறார் காமராசர்

சென்னை, ஏப்ரல் 1

அண்மையில் சென்னையில் மாணவர்களுக்கும் அரசாங்கப் போக்குவரத்து ஊழியர்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்புச் சம்பவங்கள்பற்றி நீதி விசாரணை நடத்த, செஷன்ஸ் நீதிபதி திரு. பி. எஸ். சோமசுந்தரம், தமிழக அரசினால், தனிநபர் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி விசாரணையின் போது சாட்சியமளிக்க விரும்பு

(8-ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு

## கண்ணகி விழாவுக்கு வரும் தென்னக அறிஞர்கள்

### கொழும்பில் தமிழ் விழா நடத்தவு ஏற்பாடு

வெள்ளவத்தை, திங்கள்


எதிர்வரும் மே மாதத்தின் முற்பகுதியில் மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் கண்ணகிவிழாவிற்கென்று தமிழகத்திலிருந்து வரவிருக்கும் அறிஞர்கள், கலைஞர்கள். தி. மு. க. அங்கத்தினர்கள் ஆகியோரைக் கொழும்புக்கு அழைத்துத் தமிழ் விழா வொன்றினை நடாத்தவும் வருமானவரித் திணைக்களத்திற்கு அழைப்பித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்குமான முயற்சிகளில் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் தமிழ் இலக்கியமன்றம் ஈடுபட்டுள்ளது.

மட்டக்களப்பு எம். பி. திரு செ. இராசதுரையுடன் தொடர்புகொண்டு இதற்கான முயற்சிகளைச் செய்வதாகவும் தமிழகத்திலிருந்து திருவாளர்கள் நாஞ்சில் கி. மனோகரன், அ. ச. ஞானசம்பந்தன், சாலை இளந்திரையன், ம. பொ. சி. ஆகியோரைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் இலக்கியமன்றச்செயலாளர் திரு. எஸ். பத்மநாதன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) — ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) — விஜிதா (ஹட்டன்)



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)

## 9-ம் திகதி இறுதி முடிவு

காங்கேசன்துறை, திங்கள் சிமேந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர்சங்கத் தலைவர்களை இம்மாதம் 9-ம் திகதி தம்மைச் சந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

சென்றமாதம் அனுப்பி வைத்த தரம்பிரிப்புகள் சம்பந்தமானவை பற்றி இக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட விருக்கிறது.

## கூப்பன்கள் யாருடையது?

திரு. ஜே. பிலிப்என்பவரால் இரண்டு கூப்பன்கள் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளவ. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Warren Beatty, Leslie Coron
in
**PROMISE HER ANYTHING**
(Techni color)

**REGAL** JAFFNA
Daily at
4-40, -7-00, & 9-45 p.m.
Tab Hunter
in
**THE GOLDEN ARROW**
[Color- Cinemas cope]

## வரி விளம்பரம்

### தேவை

நெசவுப் பயிற்சி
நெசவில் பயிற்சியுள்ள பெண்களும், பயிற்சிபெறும் பெண்களும் தேவை. விடுதி வசதியும் உண்டு. விபரங்களுக்கு: சுதாஸ் நெசவு நிலையம், தென்மூலை, அச்சுவேலி 1650

தேசிய லொத்தர்சபையின் ''ஜாதிக்க சம்பத்த'' அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனை செய்வதற்கு சப் சுவீப் ஏஜண்டுகளும் வெளிவிற்பனையாளர்களும் [ஆண்/பெண்] தேவை விண்ணப்பம் செய்ய விரும்புவோர் செ. இரகுநாதன், இல. 24, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 1969

கடனாக ரூபா 25,000 தேவை. தெருவோரமுள்ள காணி ஈடாகவோ, ஒருபகுதி அறுதி முறையிலோ கொடுக்கலாம். எம். சுவாமிநாதர் முத்துகிருஷ்ணர் ஒழுங்கை, சுன்னாகம். 1402

### விற்பனைக்கு

காணி:
சுண்டிக்குளியில் உள்ள கல்வீடும் கடையும்கொண்ட 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 19/1 சோமசுந்தரம்அவனியூ, சுண்டிக்குளி. 4101

கடை
யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதியில் ஹோட்டல் வியாபாரம் நடைபெற்று வந்த 126-ம் இலக்க கடை காலியான நிலையில் வாடகைக்குக் கொடுக்கப்படும். எல்லா வியாபாரத் துறைக்கும் பொருத்தமானது. விபரங்களுக்கு தி. மகாதேவா, 286, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1967

### கல்வி

வகுப்புக்கள்
அனுபவம் வாய்ந்த சிங்கள ஆசிரியரால் சிங்கள வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலும் கொக்குவிலிலும் நடத்தப்படுகின்றன. படிக்க விரும்புவோர் 'சாந்திமாலா', K. K. S. றோட், கொக்குவில் என்னும் விலாசத்தில் நேரிலாயினும், கடித மூலமாயினும் தொடர்பு கொள்ளவும். 1976

விவசாயிகளுக்குஅரியசந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!
**அதிசய நெல் I R 8**
ஏக்கருக்கு 175 புசல் விளைச்சலை உடையது.
முறையான விதைநெல் புசல் ரூபா 20/-
**கலைவாணி விவசாயப்பண்ணை**
10, மெயின்வீதி, யாழ்ப்பாணம் — இலுப்பக்கடவை.

---


நினைத்தேன் வந்தாய் 100 வயது!

**ராஜா** (யாழ்ப்பாணம்) **ஜெஸீமா** (கொழும்பு)

# வெற்றி முரசு கொட்டும் 100 வது நாள்!

இன்று (2-4-68) எல்லா காட்சிகளுக்கும் எல்லா வகுப்புகளுக்கும் அரைக்கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்.

தொடர்ந்து தமிழ்ப் புத்தாண்டை நோக்கி வீர நடை போடுகிறான்



ராஜா திரையில் உங்கள் ரிக்கட்டுகளை கவனமாக வைத்திருந்து 13-4-68 தமிழ்ப் புத்தாண்டில் அதிர்ஷ்டம் பார்க்கும் பொழுது அதிர்ஷ்டசாலிகளாகுங்கள். முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு இந்தியா போய்வர விமான ரிக்கற்றுகளும் மற்றும் பல அதிர்ஷ்டசாலிகளுக்கு விலை உயர்ந்த பரிசில்களும் கிடைக்கும்.

பரிசு பெறும் டிக்கட்டுகளின் இலக்கங்களை எமது தியேட்டரிலும் 15-4-68 'ஈழநாடு' பத்திரிகையிலும் பார்க்கலாம்.

எம். ஜி. ஆர்
ஜெயலலிதா
நம்பியார்
நடித்த

# காவல்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடவியட்னும் பெரும்பகுதியில் குண்டுவீச்சை நிறுத்துமாறு ஜோன்சன் உத்தரவு

## வியட்னும் சமாதானத்துக்கு அமெரிக்கா எடுக்கும் முதல் நடவடிக்கை என்கிறுர்

**வாஷிங்டன், ஏப்ரல் 1**

**வட வியட்னுமின் பெரும் பாகத்திலும் அமெரிக்க விமான குண்டு வீச்சை நிறுத்துமாறு அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன்ஸன் உத்தரவிட்டுள்ளார். வியட்னும் போர் விஸ்தரிப்புக் குறைப்பு நடவடிக்கையாக அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். நேற்றிரவு, நாடெங்கும் ஒலிபரப்பப்பட்ட டெலிவிஷன் நிகழ்ச்சி ஒன்றில், இவ்வாறு ஜோன்சன் அறிவித்தார்.**

அமெரிக்கக் குண்டு வீச்சு நிறுத்தப்படும் பகுதி, வட வியட்னும் ஜனத்தொகையில் 90 சதவீதமும், அதன் பிரதேசத்தில் பெரும் பகுதியையும் உள்ளடக்கியது என்று திரு. ஜோன்சன் தெரிவித்தார். வடவியட்னுமில் அதிகமாக மக்கள் வசிக்குமிடங்களும், உணவு உற்பத்திப் பிராந்தியங்களும் குண்டு வீச்சிலிருந்து விலக்களிக்கப்படுமென்றும் அவர் கூறினுர்.

### முதல் நடவடிக்கை

வியட்னும் போர் விஸ்தரிக்காமல் தடை செய்யவும் சமாதானத்துக்கு வழிவகுக்குமுகமாகவும் விடுக்கப்படும் முதல்நடவடிக்கை இது என அமெரிக்க ஜனுதிபதி மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்கா, தனது பக்கத்தில் விதித்துள்ள இந்தக்கட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பக்கத்திலிருந்தும் பதில் கட்டுப்பாடு கிடைக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாகத் திரு. ஜோன்சன் கூறினுர். வியட்னுமில் முற்று முழுதாக அமெரிக்கக்குண்டு வீச்சை நிறுத்துவது என்பது, அடுத்து நடைபெறவிருக்கும் சம்பவங்களைப் பொறுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### முற்ருக நிறுத்த முடியாது

இப்போதைய சூழ்நிலையில், வட வியட்னும் மீதான அமெரிக்கக் குண்டு வீச்சை முற்ருக நிறுத்தத் தம்மால் உத்தரவிட முடியாதென்ருர் ஜோன்சன். அப்படி நிறுத்தினுல், வியட்னுமிலுள்ள அமெரிக்கத் துருப்புகளினதும், நேச நாடுகளின் துருப்புகளினதும் பாதுகாப்புக்கு ஆபத்தாக அமையலாமென்றும் அவர் கூறினுர்.

வியட்னுமில் நடக்கும் பலாத்கார, நடவடிக்கைகளைக் குறைக்குமுகமாக இந்தக் குண்டு வீச்சுக்கட்டுப்பாட்டை மேற்கொண்டுள்ளதாகத் திரு. ஜோன்சன் கூறினுர்.

### ஹோ-சி- மினுக்கு வேண்டுகோள்

அமெரிக்காவின் இப்புதிய சமாதான நடவடிக்கைக்கு நல்ல முறையில் பதில் நடவடிக்கை எடுக்குமாறு ஜனுதிபதி ஜோன்சன், வட வியட்னும் ஜனுதிபதி திரு. ஹோ-சி-மின்னைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதன் மூலம், வியட்னுமில்நடைபெறும்நீண்டகால இரத்தக் களரிக்கு ஒருமுடிவு காண்பதில் இனியும் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஜனுதிபதி ஜோன்சன் மேலும் தெரிவித்தார்.

### விசேஷ பிரதிநிதி ஹரிமன்

இத்தகைய பேச்சுவார்த்தைகளில் தமது விசேஷ பிரதிநிதியாகக் கலந்கொள்ளத் திரு. அவெரில்ஹரிமனை தாம் தெரிவு செய்துள்ளதாகத் திரு. ஜோன்சன் அறிவித்தார்.

வியட்னும் போருக்கு விரைவில் உண்மையான சமாதான முடிவொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஒத்துழைக்குமாறு ஜெனீவா மாநாட்டு இணைத்தலைவர்களான பிரிட்டனையும், ரஷ்யாவையும் ஜனுதிபதி ஜோன்சன் கோரியுள்ளார்.

### எச்சரிக்கை

சமாதானத்துக்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதே நேரத்தில், வியட்னுமிலுள்ள அமெரிக்கத்துருப்புகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அமெரிக்கா எடுக்கத்தவருது என்றும் திரு. ஜோன்சன் தெரிவித்தார்.

வட வியட்னுமிடமிருந்து பதில் சமாதான நடவடிக்கைகள் எதுவும் கிடைக்காவிட்டால், வியட்னும்போரில் அமெரிக்கத்துருப்புகளின் உறுதியும், தோல்வியடையாத் தன்மையும் நன்கு எடுத்துக்காட்டப்படும் என்று அவர் எச்சரித்தார்.

அடுத்த 5 மாதங்களில், 13,000 மேலதிக அமெரிக்கத்துருப்புகள்வியட்னுமுக்கு அனுப்பப்படும் என்று திரு. ஜோன்சன் தெரிவித்தார்.

---

## எவ்-111 விமானங்கள் குண்டுவீச்சில் ஈடுபடா

சைகோன், ஏப்ரல் 1

இதற்கிடையில், வியட்னும் போரில் அமெரிக்கா புதிதாக ஈடுபடுத்திய ஜெட் விமானங்களில், மீதியாகவுள்ள 4 விமானங்களையும் குண்டுவீச்சு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாது, தரையிலேயே வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்புதிய விமானங்களில் இரண்டு, கடந்த 3 தினங்களில் இழக்கப்பட்டதைத் தொடர்ந்தே அமெரிக்கா இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

குண்டுவீச்சு விஷயத்தில் புறப்பட்டுச் சென்ற தமது இரண்டாவதுஎவ்-111 விமானமும், வடவியட்னுமியரால் சுட்டுவீழ்த்தப்பட்டது என்ற செய்தியை அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் மறுத்துள்ளன.

## டோக்கியோவில் மாணவர் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, ஏப்ரல் 1

வியட்னும் போரில் காயமுற்ற அமெரிக்கப் போர் வீரர்களுக்குச் சிகிச்சை அளிக்குமுகமாக டோக்கியோவில் நிறுவப்பட்டுள்ள இராணுவ ஆஸ்பத்திரிக்கு எதிர்ப்புத்தெரிவிக்குமுகமாக நேற்று ஜப்பானிய மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தினர்.

மாணவர்களைக் கலைக்கப் பொலிசார் தடியடிப்பிரயோகம்செய்தனர். [illegible]வர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

---

## சபா விவகாரம் பற்றி மலேசியப்பிரதமர் துங்கு

கோலாலம்பூர், ஏப். 1

மலேஷியாவுக்கும் பிலிப்பைன்சுக்குமிடையே பிரச்னைக்குரிய பிரதேசமாக விளங்கும் சபா என்னும் இடம் சம்பந்தமாக பிலிப்பைன் ஜனுதிபதி திரு. மார்காசுடன் தாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத்தயார் என மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் இங்கு கூறியுள்ளார்.

சபா விவகாரத்தில் இறுதியான ஒரு தீர்வு காண வேண்டியது அவசியமெனத் துங்கு வலியுறுத்தினுர்.

இப்பிரச்னையை உலக நிதாபனம் எதனிடமும் சமர்ப்பிப்பதில் எவ்வித பயனுமில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். இத்தகைய யோசனையைப் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

சபா பிரதேசத்தின் விவகாரங்களில் மலேஷியா குறுக்கிடுவதாகப் பிலிப்பைன்ஸ் செய்துள்ள குற்றச்சாட்டைப் பிரதமர் துங்கு மறுத்தார்.

---

## சீனக்கப்பலின் நடவடிக்கை

### கீன்யா ஆட்சேபம்

நைரோபி, ஏப்ரல்1

மொம்பாஸா துறைமுகத்தில், ஆட்சேபத்துக்குரிய முறையில் நடந்துகொண்டதாகச் சீனுவிடம் கீன்யா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மொம்பாஸா துறைமுகத்துக்கு வந்திருந்த சீனக்கப்பலொன்று, சீனத்தலைவர் திரு மா-சே-துங்கின் பெரிய உருவப்படத்தைத் தாங்கியிருந்தது. அத்துடன், அவருடைய உபதேசங்கள் அடங்கிய அட்டைகளும்தொங்கவிடப்பட்டிருந்தது.

கப்பற் சிப்பந்திகள், துறை[illegible] விநியோகிக்கவும் காணப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு கீன்யா அதிகாரிகள், கப்பல் தலைவரிடம் ஆட்சேபம்தெரிவித்தனர். அதைத்தொடர்[illegible], கப்பல் தலைவர், கப்பலை வேறுதிசைக்குத் திருப்பிச் சென்றுவிட்டார்,

---

## தென் மேற்கு ஆபிரிக்கா செல்லும் ஐ.நா. அதிகாரிகள்

### அங்கு இறங்க அனுமதிக்கப்படார் என்கிறது தென்னுபிரிக்கா

லுஸாக்கா, ஏப்ரல் 1

தென் மேற்கு ஆபிரிக்காவுக்குச் செல்லுமுகமாக ஐ. நா. அதிகாரிகள் இருவர், ஸாம்பியா வந்துசேர்ந்துள்ளனர்.

தென் மேற்கு ஆபிரிக்கா, ஐ. நா. உத்தரவாதத்துக்குட்பட்ட பிராந்தியம் என்று ஐ.நா.பந்தோபஸ்து சபை முடிவுசெய்துள்ளது. ஆனுல் இந்த முடிவை ஏற்கத் தென்னுபிரிக்கா மறுத்து வந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தென் மேற்கு ஆபிரிக்காவுக்கு நேரில் சென்று பார்வையிட ஐ. நா. சார்பில் இந்த இரு அதிகாரிகளும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களிருவரும் ஸாம்பியாவிலிருந்து தென் மேற்கு ஆபிரிக்காவுக்கு விமான மூலம் செல்லவிருக்கின்றனர். ஆனுல் இவர்களைத் தென் மேற்கு ஆபிரிக்காவில் இறங்க அனுமதிக்கமுடியாதென்று தென்னுபிரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

### 30 கைதிகள் விவகாரம்

பிரிடோரியாவில் கைது செய்து வைத்துள்ள 30 தென் மேற்கு ஆபிரிக்கர்களையும் விடுவிக்குமாறு ஐ. நா. பந்தோபஸ்து சபை விடுத்துள்ள கோரிக்கையையும், தென்னுபிரிக்க அரசாங்கம் ஏற்கமறுத்துள்ளது.

ஐ. நா. பொதுக்காரியதரிசியின் விசேஷ பிரதிநிதி ஒருவரை வரவேற்கத் தமது அரசாங்கம் தயாராகவுள்ளதாகத் தென்னுபிரிக்க வெளியுறவு மந்திரி அறிவித்துள்ளார்.

அவ்விசேஷ பிரதிநிதிக்குத் தென் மேற்குஆபிரிக்கா பற்றிய தகவல்கள் அளிக்கப்படுமேயன்றி, கைதிகள் விடுதலை பற்றி அவருடன் பேசப்படாதென்று அவர் மேலும் தெரிவித்தார்.

---

## செக். பிரதமர் லெனுட் பதவி நீக்கம்?

பிராக், ஏப்ரல் 1

செக்கோஸ்லவாக்கியப் பிரதமர் திரு. லெனுட், அவரது பதவியிலிருந்து நீக்கப்படுவாரெனத் தெரியவருகிறது. செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் இன்றைய கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்படுமெனக் கூறப்படுகிறது.

அவரது இடத்தில், தற்போதைய உதவிப் பிரதமர் நியமிக்கப்படலாம்.

செக்கோஸ்லவாக்கிய வெளியுறவு, பாதுகாப்பு மந்திரிகளும் அவர்களது பதவிகளிலிருந்தும் நீக்கப்படுவார்களென்றும் தெரிய வருகிறது.

---

## இஃரேல் துப்பாக்கிப்பிரயோகத்தில் அரபியக் குழந்தை ஒன்றுமரணம்

ஜெருசலம், ஏப்ரல்1

ஜெருசலத்தில், இஸ்ரேல் கடந்த மேற்கு ஆசியப் போரில் கைப்பற்றிய பகுதியான ஹெப்ரோன் என்னுமிடத்தில், இஸ்ரேல் துருப்புகளுக்கும் அரபு கொரில்லாக்களுக்குமிடையே துப்பாக்கிப்பிரயோகம் நேற்று நடந்தது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் அரபியர் ஒருவரும், அரபுக்குழந்தையொன்றும் பலியாகினர்.

இஸ்ரேல் பாகத்தில், ஒரு பொலிஸ்காரர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## அரபு உச்சிமாநாடு விரைவில் நடைபெருது

கெய்ரோ, ஏப்ரல்1

இதற்கிடையில், அரபு உச்சி மாநாடொன்றுக்கான சந்தர்ப்பங்கள் குறைந்துவருவதாகக் கெய்ரோச் செய்திகள் அறிவிக்கின்றன.

ஐ.நா.விசேஷ பிரதிநிதி டாக்டர் குன்னர் ஜாரிங்கின் வேலைகள் முடிவுறும்வரை அரபு உச்சி மாநாட்டை ஒத்திவைக்க வேண்டுமெனச் சவுதி அரேபியமன்னர்பெய்ஸல் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

சவுதிஅரேபிய மன்னர் பெய்ஸலின் இந்த ஆலோசனையை ஜோர்தான் மன்னர் ஹூசெயின் கண்டித்துள்ளார்.

---

## ஏப்பரல் 13-ல் இறுதியாட்டம்

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினத்தின வெற்றிக்கேடயத்திற்காக நடைபெறும் கரபந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டம் இம்மாதம் 13-ந் திகதி நடை பெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தனக்குள் சாந்தியைக் கண்டவர்தான் உலகத்திலே மற்றவர்களுக்கு அமைதி ஏற்படச்செய்ய முடியும். தனிப்பட்டவர்களின் அமைதியே உலக அமைதிக்கு அடிகோலும். அது ஒன்று தான் வழி.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelana u N.tional Tamil Daily
Telegrm: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 20ம் திகதி [2-4-68]

# ஒருநல்ல செய்தி

வடவியட்னாம் மீது குண்டுவீசுவதை வெகுவாக நிறுத்தியதுடன் ஜெனரல் ஹோசிமினுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடாத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் முன்வந்துள்ளது நல்லதோர் செய்தியாகும். இந்த நடவடிக்கையை அவர் சில வாரங்களுக்கு முன்பே ஐ.நா. காரியதரிசி கூறிய யோசனைமீது எடுத்திருப்பின் பல விதங்களிலும் மேலாக இருந்திருக்கும். இப்போதாவது அவர் பிடிவாதம் காட்டாமல், இதற்கு இசைந்தது வரவேற்கத்தக்கது.

ஜனாதிபதியின் இந்த மனமாற்றத்துக்கு என்ன காரணம்? போர்க்களத்திலே ஏற்பட்டுவரும் உயிர் பொருள் சேதங்கள் ஒருபுறமிருக்க, உள்நாட்டிலே வியட்னாம் கொள்கைக்கு எதிர்ப்பும் அதிகரித்துள்ளது. தமது கொள்கையை எதிர்க்கும் கென்னடிக்கும், மக்கார்த்திக்கும் அதிக வெற்றி கிடைத்து வருவதைக் கண்டதும், ஜனாதிபதி ஜோன்ஸன், அமெரிக்க பொதுமக்களின் கருத்தை உணர்ந்து மனம்மாறியிருக்க வேண்டும். ஏற்கெனவே அவர் தளபதி ஜெனரல் வெஸ்ட் மோர்லந்தை, வியட்னாம் அரங்கத்திலிருந்து நீக்கியதுடன், அதிகமான துருப்புக்களை தென்வியட்னாமுக்கு அனுப்ப மறுத்துள்ளார். வியட்னாம் கொள்கையை மாற்றிக்கொள்ள அவர் ஏற்கெனவே தீர்மானித்துள்ளதற்கு இவை அறிகுறிகள்.

குண்டுவீச்சு நூற்றுக்குத் தொண்ணூறுவீதம் நின்றுவிடுமென்றும், தென்வியட்னாமிலுள்ள தங்களதும் தங்களது சகாக்களினதுமான துருப்புகளைப் பாதுகாத்துக்கொள்ளவே பத்துவிகித குண்டுவீச்சை தொடர்ந்து நடத்தவேண்டியுள்ளதாகவும் கூறுகிறார் ஜோன்ஸன். இதற்கும் அவசியமிருக்குமெனத் தோன்றவில்லை. அமெரிக்காவின் குண்டுவீச்சு நிற்குமாயின், தாங்கள் சமாதானம் பேசத் தயார் என்று, வடவியட்னாம் சார்பாக ஐ நா. காரியதரிசியுடன் ஏற்கெனவே உறுதி கூறப்பட்டுள்ளது. இந்த உறுதி உண்மையாயின், அமெரிக்க அதிபரின் சமிக்ஞையை ஜெனரல் ஹோசிமின் நிராகரிக்கமுடியாது. தங்கள் இராணுவத்தினரின் உயிரையும், தன்மானத்தையும் காத்துக்கொண்டு, கண்யமாக வியட்னாம் சேற்றிலிருந்து வெளியேற வேண்டுமென்பதே அமெரிக்க ஜனாதிபதியின் இப்போதைய நோக்கமாயின் அதற்கு வடவியட்னாம் தடையாக இருக்கத் தேவையுமில்லை.

ஜெனிவா ஒப்பந்தநாடுகளான பிரிட்டனையும், ரஷ்யாவையும் இவ்விஷயமாக அமெரிக்கத்தலைவர் கேட்டுக் கொண்டிருப்பதுடன் சமாதானப் பேச்சை தமது சார்பாக நடத்த மிஸ்டர் ஹரிமனையும் நியமித்துள்ளார். இதிலிருந்து ஜோன்ஸனின் சமாதான நோக்கம் தெளிவாகின்றது. இதைப் பின்பற்றி, வடவியட்னாம் தலைவர்கள் சமாதானப் பேச்சுகள் நடத்துவார்களா? அமெரிக்கா அதன் நேசநாடுகள் இவற்றின் துருப்புகளெல்லாம் வியட்னாம் மண்ணிலிருந்து வெளியேற வேண்டுமென்றும், தென்வியட்னாமிலுள்ள வியட்காங்கினரை அங்கீகரித்து, அவர்களது பிரதிநிதிகளையும் சமதானப் பேச்சுகளில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஜெனரல் ஹோசிமின் கேட்கலாம். சமாதானப் பேச்சுகளுக்கு இதுபோன்ற சிலதடைகள் இருப்பினும் முடிவான சமாதானத்தை முன்னிட்டு அமெரிக்கா இன்னும் சில கசப்பு மாத்திரைகளை விழுங்கத்தான் வேண்டியிருக்கும்.

இதற்கிடையே, தெற்கு வியட்னாம் தலைவர் குயன் வான்தியூ, பூரணபடை திரட்டல் பிரகடனம் செய்துள்ளதுடன், அமெரிக்கா உதவிசெய்யாவிட்டாலும், தாங்களே யுத்தத்தை நடத்துவதாகவும் அறிவித்துள்ளார். இதைப்பற்றி யாரும் அதிகம் கவலைப்படத்தேவையில்லை. அமெரிக்கா உதவி செய்யாவிடில், ஒருசில நாட்களும் இந்தச் சண்டை நீடிக்காது. வியட்னாம் விஷயமாக மட்டுமன்றி பொதுவாகதனது ஆசியாக் கொள்கையைப் பற்றியும் அமெரிக்கா புனராலோசனை செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டது.

இத் தலையங்கத்தை எழுதி முடித்தபின், திரு. ஜோன்ஸன், ஜனாதிபதி தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கப்போவதில்லையென்று தீர்மானித்தமுக்கிய செய்தி கிடைத்தது. இதிலிருந்து அவர் தேர்தல் காரணங்களுக்காக மேற்குறித்த வியட்னாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், தமது வியட்னாம் கொள்கை தவறு என்பதை அமெரிக்க பொதுமக்கள் அதிகம் உணர்ந்துவிட்டதற்கு, அவர் செவிமடுத்து, மிக விவேகத்துடன் தேர்தல் போட்டியிலிருந்து விலகியுள்ளாரென்பதும் தெளிவு. அமெரிக்க பொதுமக்களுக்கு இது பெரியதோர் வெற்றியுமாகும்.

ஆசிரியருக்கு கடிதம்

# "இந்தியர்களை வெளிநாடுகளில் குடியேறச் சொல்லவில்லை"

இந்தியாவின் சனத்தொகைப் பிரச்னையை தீர்ப்பதற்கு இந்தியர்கள் வெளிநாடுகளுக்கு சென்று குடியேறவேண்டுமென இந்திய யூனியன் சுகாதார, குடும்பக்கட்டுப்பாடு மந்திரி டக்டர் எஸ். சந்திரசேகர் கூறினாரென்று ஒரு செய்தியை சமீபத்தில் இலங்கை பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன

'இந்தியாவின் புதிய சனத்தொகை கொள்கை' என்ற தலைப்பில் டாக்டர் சந்திரசேகர் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தை அடிப்படையாகக் கொண்டதே இச் செய்தி.

உலகில் பெருகிவரும் சனத்தொகைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளில் குடியேறுதல் போன்ற பரிகாரங்களை சனத்தொகை நிபுணர்கள் ஆலோசித்துள்ளனர். இது பற்றி மந்திரியவர்கள் பொதுப்படையாக குறிப்பிட்டதிலிருந்தே இத் தவறான செய்தி வெளிவந்துள்ளது.

வெளிநாடுகளில் குடியேறுவதால் இந்தியாவின் பிரச்னைகள் தீர்ந்துவிடுமென்று மந்திரி சந்திரசேகரோ, வேறு அரசியல் தலைவரோ, நிபுணரோ எவரும் கூறவில்லை.

திருப்பதி பிரசங்கத்தில் மந்திரியவர்கள் உண்மையில் கூறியது பின்வருமாறு; 'இந்தியாவின் சனத்தொகை வீக்கத்துக்கு சிறிய பரிகாரம் எதுவுமில்லை. ஆனால் பொருளாதார அபிவிருத்தி குறைந்த ஒரு நாட்டுக்கு பொதுவாக ஐந்து வித மார்க்கங்கள் சிபார்சு செய்யப்படுகின்றன. அவையாவன, [1] விஞ்ஞான விவசாய வளர்ச்சி, [2] பெருமளவு கைத்தொழில் அபிவிருத்தி, [3] பிராந்திய நெருக்கடிகளைத் தீர்க்க உள்ளூரில் குடியேற்றம். [4] வெளிநாடுகளில் குடியேறுதல், [5] எல்லாவற்றையும்விட முக்கியமானது குடும்பக்கட்டுப்பாடு. எமது பொருளாதார பிரச்னைக்கு சிறந்த பரிகாரம் பிறப்பு விகிதத்தைவிரைவில் குறைப்பதே'.

சுதந்திர இந்தியாவின் தலைவர்கள் ஒருபோதும் வெளிநாட்டு குடியேற்றத்துக்கு ஆதரவு அளித்ததில்லை. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே கூலியாட்கள் வெளிநாடுகளுக்கு சென்று குடியேறுவது தடுக்கப்பட்டது. உதாரணமாக 1939-ம் ஆண்டில் இந்திய தொழிலாளிகள் இலங்கைக்கு செல்வது துப்புரவாக நிறுத்தப்பட்டது. 1941-ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி இது சற்றே தளர்த்தப்பட்டது

இந்தியர்கள் வெளிநாடுகளில் குடியேறுவதை இந்திய அரசாங்கம் ஒருபோதும் ஆதரிக்கவில்லையென்பது இவற்றால் நன்கு புலப்படுகிறது. இந்தியாவின் சனத்தொகைப் பிரச்னையை தீர்ப்பதற்கு வெளிநாட்டு குடியேற்றம் வழிவகுக்கும் என்று யூனியன் மந்திரி டக்டர் சந்திரசேகர் கூறியிருக்கமுடியாது.

எஸ். திரிபதி
முதற் காரியதரிசி [தகவல்]
இந்திய ஹைமிஷன்,
கொழும்பு.
31-3-68

## வில்லூன்றி மயானம்

20-3-67-ல் ஈழநாடு பத்திரிகையில் வெளியான வில்லூன்றி மயான சம்பந்தமான கட்டுரையில் வெளியான விஷயங்கள் ஆதாரமற்றதென்றும் நிர்வாகியும் கொட்டடி சைவ அபிவிருத்திச் சங்க காரியதரிசியும் ஆகிய திரு, சோ. இராசரத்தினம் செட்டியார் தெரிவிக்கின்றார். யாரையும் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அக் கட்டுரை வெளியிடப்படவில்லை. அவ்விஷயங்கள் அவரைப் புண்படுத்தியிருப்பின் அதற்காக வருந்துகிறோம்.

## இன்றைய பலன்

பங்குனி மீ 20 உ
[2-4-68]
செவ்வாய்க் கிழமை

திதி- சதுர்த்தி பகல் 11-59 மேல் பஞ்சமி.

நட்சத்திரம்- கார்த்திகை மாலை 5-20 மேல் ரோகிணி.

ராகுகாலம்- 3-11—4-41.

சுபநேரம்- 10-41—12-11.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு சமநிலையையே குறிப்பிடுகின்றது. வருவாய்க்கு வழி இருப்பினும் செலவும் அதிகப்படியாகவே இருக்கும். விருந்தினர் வருகை, உங்களைத் திகைக்க வைக்கும். தொழில்புரியும் இடத்தில் தொல்லையைத் தவிர்க்கவும். சந்தேகத்துக்கு இடம்கொடுக்க வேண்டாம்.

மேஷம்- தொழில் கவலை, தொல்லைகள் பெருகும்.
ரிஷபம்- மக்கள் பிணி. மனப்போராட்டம்,
மிதுனம்- வெள்ளிப் பணம் தள்ளும், வேண்டியது கிடைக்கும்.
கடகம்- எண்ணியது தடை, இனத்தில் பூசல்.
சிம்மம்- அன்னையின் ஆசி, அனைத்திலும் வெற்றி.
கன்னி- அறவழிநாட்டம், தாராள மனம்
துலாம்- பக்கத்திலே படுகுழி, உஷாராகவிரு.
விருச்சிகம்- தாம்பத்தியம் சிறக்கும், தனமும் சேரும்.
தனுசு- செய்தொழில் தாமதம் சிந்தனைமிகுதி.
மகரம்- குரு விசுவாசம் குறிக்கோளில் வெற்றி.
கும்பம்- தொழில்நலன் தொடர்புகள் பெருகும்.
மீனம்- புத்திரர் புகழ், புதுமையில் நாட்டம்.

ஜோதிடக்கலாநிதி
திருமதி [illegible]

## உடைகள் திருட்டு

வெள்ளவத்தை, திங்கள்

வெள்ளவத்தை கடற்கரையில் போயா தினத்தில் குளிக்கச் சென்ற தமிழ் அரசாங்க ஊழியர் ஒருவரின் உடைகளை யாரோ திருடிக்கொண்டு சென்று விட்டனராம். நல்ல காலமாக நண்பர்களின் உதவியுடன் இந்த இளைஞர் தமது அறையிலுள்ள வேறு உடைகளை எடுப்பித்து அணிந்து தமது மானத்தைக் காத்தாராம்.

திருட்டுப்போன இவரது உடைகளின் பெறுமதி 75 ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த இளைஞராவார்.

## நாட்டிலும் நகரிலும்

அமெரிக்க ஜனாதிபதி லின்டன் பி. ஜோன்ஸன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில்போட்டியிடப்போவதில்லையென்ற செய்தியை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகமும் ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

இச்செய்தி உலகின் பல பாகங்களில் பெருமூச்சுடன் வரவேற்கப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை அர்த்தமில்லாத வியட்னாம் யுத்தம் தொடர்ந்து நடப்பதற்கும் அநியாயமாக ஆயிரமாயிரம் உயிர்கள் நாளை தோறும் அழிவதற்கும், ஜனாதிபதி ஜோன்ஸனின் விடாக் கண்டன் கொள்கையே காரணமானதென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

உலகத்திலேயே மிகவும் செல்வம் நிறைந்த நாடு, பலம் மிக்க நாடு என்ற திமிரில் ஜோன்ஸன் அமெரிக்காவைக் கொண்டுபோய் வியட்னாம் என்ற அதலபாதாளச் சேற்றில் தள்ளிவிட்டார் என்பதே பொதுவாக உலக அபிப்பிராயம்.

அந்த திக்விஜயத்தில் அமெரிக்கா கொட்டிச் செலவழித்த பணம் கொஞ்சநஞ்சமல்ல.

ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம்.

தன்னிடமுள்ள ஆயுதபலம் முழுவதையும் [அணு குண்டு ஒன்றைத் தவிர] அமெரிக்கா வியட்னாமில் உபயோகித்துப் பார்த்தது. பிரயோசனம் எதுவுமில்லை.

சில நாட்களுக்கு முன்பு 'சுப்பர் ஜெட்' என்ற ஆறு அதி நூதன விமானங்களை அமெரிக்கா வியட்னாமுக்கு அனுப்பியது. ஒரு வாரத்துக்குள்ளேயே இவ்வதிசய விமானங்களில் இரண்டு போன இடம் தெரியவில்லை

இந்த விமானம் ஒன்றின் பெறுமதி சுமார் 59 1/2லட்சம் அமெரிக்க டாலர் (சுமார் 3 1/2 கோடி இலங்கை ரூபாய்) என்று கணிக்கப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்பு 'பியூப்லோ' என்ற அமெரிக்க உளவறியும் கப்பலை வட கோரியர் கைப்பற்றினார்கள் அதை விடும்படி அமெரிக்கா ரஷ்யாவைக் கூட கெஞ்சிப் பார்த்தது. ஒன்றும் நடக்கவில்லை. 'பியூப்லோ'வும் அதன் மாலுமிகளும் கைதிகளாகவே இருக்கின்றனர்.

வியட்னாமில் அமெரிக்க சேனாபதியாயிருந்த ஜெனரல் வெஸ்ட் மோர்லன்டை திருப்பியழைத்து விடுவதென்று சமீபத்தில் அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்தது.

வடவியட்னாம் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசுவதை நிறுத்தப்போவதாக ஜனாதிபதி ஜோன்ஸன் ஐ. நா. காரியதரிசி யூதாண்ட்டிடம் நேற்றுமுன் தினம் கூறினாராம்.

வியட்னாம் விஷயத்தில் ஜோன்ஸன் அலுத்துக் களைத்துப் போய்விட்டார் என்பதையே இச்செய்திகள் எல்லாம் தெரிவிக்கின்றன, 'பென்னம் பெரிய அமெரிக்கா சின்னஞ்சிறு வியட்னாமுக்குவிட்டுக் கொடுப்பதா' என்ற ஒருபோலிக் கௌரவமே இன்று வரை அமெரிக்காவை வியட்னாமில் வைத்திருந்தது.

ஆயிரம் வருடங்கள் அமெரிக்கா வியட்னாமில் இருந்தாலும் வியட்னாமை மடக்க முடியாதென்று இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ கிருஷ்ணமேனன் சமீபத்தில் கூறியதும் இங்கு நினைவு வருகிறது.

எவ்விதமாயினும், இந்த கடைசி நேரத்திலாவது நிலைமையை உணர்ந்து வருகிற நவம்பரில் நடக்கவிரு

(4-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத் தொடர்ச்சி]

க்கும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதில்லையென்று அவர் பகிரங்கமாக தெரிவித்திருப்பது ஜோன்ஸனின் அரசியல் சூட்சுமத்தையும் பெருந்தன்மையையும் காட்டுகிறது.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுத்த அனுபவசாலிகள் சேவையை இழக்கநேரிடும்

## '55 வயது ஒய்வு' பற்றி

## வ.இ.தமிழ் ஆசிரியர்சங்கம் தீர்மானம்

உரும்பராய், திங்கள் "அரசாங்க ஊழியர்கள் 55 வயதில் ஓய்வு பெற வேண்டும் என்று சட்டம் வர இருப்பதாகப் பத்திரிகைச்செய்திகள் கூறுகின்றன. இப்படியான ஒரு புதிய சட்டம் வருமானல் இலங்கையில் மிகவும்பழுத்த அனுபவசாலிகளான பலரி இழைப்பாற நேரிடும். விசேஷமாக நல்ல அனுபவம் உள்ள ஆசிரியர்களது அரும் பெரும்சேவையை இந்நாடு இழந்துவிடும். இதனுல் நாட்டின் கல்விநிலை மிகவும் மோசமடையும். எனவே அரசாங்க ஊழியர் 55 வயதில் ஓய்வுபெறவேண்டும் என்ற யோசனையை அரசாங்கம் கைவிடவேண்டும்.'

மேற்கண்ட தீர்மானம் சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற வட இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது.

வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்மேற்கண்ட பிரேரணையைப் பிரேரித்துப் பேசிய வலிகிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு. அ பஞ்சாட்சரம் தொடர்ந்து கூறுகையில், "இளம் வயதில் பல துறைகளிலும் தொழில் புரிபவர்கள் ஐம்பது, ஐம்பத்தைந்தாம் வயதிலேயே பூரண அனுபவத்தைப் பெறுகின்றனர். 55 வயதுக்குமேலும் தொடர்ந்துசேவையாற்றும்போ து அனுபவரீதியாக பல முன்னேற்றங்களை நடைமுறைக்குக்கொண்டுவர முடிகிறது. நீதியரசர்கள் அறுபத்திரண்டு வயதுவரை கடமையாற்றலாம் என்பதுகூட அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டே" என்ருர்.

திரு. இ.துரைசிங்கம் வழிமொழிய அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. சுந்தையா பொதுச் செயலாளர் திரு. க. இ. குமாரசாமி ஆகியோர்கள் தீர்மானத்தை ஆதரித்துப்பேசினர்.

மேற்கண்ட தீர்மானத்தை பிரதம மந்திரிக்கும் திறைசேரிக்கும் தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைப்பதென முடிவு செய்யப்பட்டது.

"இலங்கையில் தமிழ் மக்களின் கல்வி நிலை எவ்வாறு அமையக்கூடும் என்று பலரும் சிந்திக்கும் இவ்வேளையில், இந்த நாட்டின் கல்விக்குத்தளராது உழைத்துவந்த வட இலங்கை தமிழ் ஆசிரியர்சங்கம் இதுபற்றிக்கல்விமான்கள், அரசியல்வாதிகளை அழைத்து கருத்தரங்கு ஒன்றை நடாத்துவது மிகவும் சிறந்தது" என்று தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரையும் தாய்ச் சங்கப் பரீட்சைக் காரியதரிசி திரு. த. இராசேந்திரமும் வற்புறுத்திப் பேசினர்கள்.

வடமராட்சித் தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு.பி. அந்தோனிப்பிள்ளை யாழ்ப்பாணத்தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. சி. பொ. குமாரசாமி ஆகியோர்சங்கத்தின் எதிர்காலவளர்ச்சிகுறித்து உரையாற்றினர்கள்.

இரண்டாந்தவணை ஆரம்பத்தில் பேச்சு, இசை, கட்டுரைப்போட்டிகளை வழக்கம்போலச் சிறப்பாக நடத்துவதெனவும், கிளைச்சங்கங்களின் வருடாந்தக் கூட்டங்கள் நடைபெற ஒழுங்குகள் செய்வதெனவும் சந்தாப் பணத்தைச் சம்பளப்பத்திரத்தில் இருந்து கழிப்பதற்குரிய வழி வகைகளைக் கையாள்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேறின.

யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோர் மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. காரியதரிசி திரு. ஆ. க. மாணிக்கம் நன்றி கூறினர்.

---

# புல்மோட்டைக்கு பஸ் மூலம் தபால்

திருக்கோணமலை, திங்கள் இன்றுமுதல் புல்மோட்டைவரை தபால்பஸ் மூலம் கொண்டு செல்லப்படும் என்று தெரியவருகிறது. இதுவரை திரியாய் வரையுமே இந்த தபால் பஸ் சேவை இருந்தது என்பதை இங்கு குறிப்பிடத்தக்கது.

---

# சமயம் என்றல் பொருள் என்ன?

## நூல் வெளியீட்டு இலாகா அதிகாரி விளக்குகிருர்

வெள்ளவத்தை, திங்கள் ஐந்துபுலன்கள் என்னும் வேடர்கள் வெவ்வேறு திசைகளில் இழுப்ப அவற்றையெல்லாம் ஒருமுகப்படுத்தி கர்ம, ஞான யோகமென்னும் மும்முனை வழியாக சிந்தனை செயல் வாக்கு போன்றவற்றை ஒருவளிப்படுத்தி பரம்பொருளை அடைய அயராதுமுயல்வது தான் சமயம். அதை விடுத்துத் தற்காலிக நாகரிக சமூக முறைகளுக்கேற்ப காட்சியொளி பொருத்தி வெறும் காட்சிப்பொருளாகச் சமயத்தைக் கொண்டுவர முயல்வது நம் சமயவழிபாட்டுக் கொள்கைக்கு முரணனது.


இவ்வாறு இலங்கை சட்டக் கல்லூரி சட்ட மாணவர் இந்துமகா சபையின் தலைவர் திரு. வி. கே நீலகண்டன் தலைமையில் நடந்த கூட்டத்தில் நூல் வெளியீட்டுத் திணைக்கள அதிகாரி திரு. இ. இரத்தினம் பேசுகையில் கூறினர்.

அவர்தொடர்ந்து மேலும் கூறியதாவது:-

சமயம் என்பது வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் அம்சத்திலும் கலந்து வாழ்வின் உயிர்நாடியாகத் திகழவேண்டும். ஆலயங்களுக்குச் சென்று வெறும் அபிஷேகங்களும் அனுட்டானமும் புரிவது மட்டும் தான் சமயம் என்று எண்ணுவது தவருனது. இந்து சமயம் ஏனைய மதத்தவரை நம் மதத்தில் மாற்றுவதனை வேண்டவில்லை. எவரெவர் எவ்வழியில் வழிபட்டாலும் அவர்கள் கடவுளையே வழிபடுகின்றனர், ஆனல் நம் மதவழிபாட்டு முறை மற்றச் சமய வழிபாட்டுமுறைகளை விடச்சிறந்தது உயர்ந்தது என்பதனை நாம் உணரவேண்டும் படிப்படியானமுறையில் நம்மாலான வழியில் ஆண்டவனை வழிபட வழிவகுக்கும் சிறந்த தன்னகத்தே கொண்ட நம் சமயம் பல்வேறு தரத்தில் — அதாவது மூன்று படிகளில் நம் வழிபாட்டு முறைகளை வகுத்துவைத்துள்ளது.

பொருட்கள் யாவும் அணுவாலானவை. அணுவில் எத்தனையோ உபஅணுக்கள் எனக் கூறும் விஞ்ஞானம் அணுவைக் கண்ணல் காணும்பேறினை நமக்கு அளித்துள்ளதா? அங்கிங்கெனதபடி எங்கும் பிரகாசமாய் உள்ள பரம்பொருளாகிய இறை

(8-ம் பக்கம் பார்க்க)




# இன்றைய விலைமதிக்கமுடியாத பரிசு: புத்தம் புதிய கார்


என்றலும், 50 சதத்துக்கே உங்களுக்குக் கிடைக்கலாம். மேலும், பெருந்தொகையான பணத்துக்குக் காசோலையும் கிடைக்கும்!

தேசிய லொத்தர் டிக்கெற் வாங்கினல் மட்டும் இது உங்களுக்குக் கிடைக்கும். ஆம், நீங்களும் புத்தம் புதிய கார் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

**சீட்டிழுப்பு இல 188 தேதி 4 ஏப்ரில் 1968**
**புத்தம் புதிய ரினேல்ட் 8 லக்ஸ் கார் ரூ. 15,344/ ***



**சீட்டிழுப்பு இல. 189 தேதி 11 ஏப்ரில் 1968**
**புத்தம்புதிய டயம்ப் 1200 கார் ரூ. 11,400/ ***



* இவைகள் தீர்வை உட்பட வழமையான [கம்பெனி பட்டியல்] விலைக்கு குறைந்ததாகும்.

இந்தக் கார்களை வழங்குவதற்கான [சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப்] பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெற் வாங்குங்கள்!

AJNS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருளைக்கிழங்கு உற்பத்தியாளருக்கு முக்கிய அறிவிப்பு

சங்கானை, திங்கள்

எதிர்வரும் காலபோகத்திற்குத் தேவையான விதை உருளைக்கிழங்குகளை வெளிநாடுகளிலிருந்து பெற வேண்டியிருப்பதால் தேவையான உருளைக்கிழங்கின் தொகையை இம்மாத இறுதிக்குள் தெரியப்படுத்த வேண்டுமென யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. க. ஜா. ஜெயசீலன் யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளருக்கு முக்கிய அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிவித்தல் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு அந்தர் உருளைக்கிழங்கின் விலை 67 ரூபா 20 சதம் ஆகும். விதைக்கிழங்கு தேவைப்படுவோர் மேற்கூறிய விலையின் பெறுமதியில் 25 சதவீதத்தை இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்னதாக தங்கள் பகுதி கூட்டுறவுசங்கத்தில் கட்டி பதிவு செய்துகொள்ளவேண்டும். மிகுதிப் பணத்தை ஐப்பசி 15-ம் திகதிக்கு முன் சங்கத்தில் கட்டிக்கொள்ளலாம். முற்பணமாகக் கட்டும் தொகை எக்காரணத்தைக்கொண்டும் திரும்பப் பெறமுடியாது.

சங்கத்தின் பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட கமக்காரர் மட்டும் எதிர்வரும் நவம்பர்மாத காலபோகச் செய்கைக்கு விதைக் கிழங்கை இலகுவில் பெற முடியும்.

முற்பணம் கட்டாதவர்களுக்கு கடைசிநேரத்திலோ அன்றேல் தனிப்பட்ட முறையிலோ விதைக்கிழங்கு வழங்கப்படமாட்டாது.

## "கலை முக்கியமானது"

வெள்ளவத்தை, திங்.

"நாலும் மேடைகளில் பல வேடங்களைத் தாங்கி நாடகங்கள் நடித்தவன். தமிழனின் வாழ்வில் கலை மிக முக்கியத்துவம்பெற வேண்டும். இவ்வாண்டில் பல புதிய படங்களை நாம் தயாரிக்க முன்வரவேண்டும்."

இவ்வாறு மட்டக்களப்பு தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், நகர மேயருமான திரு. செ. இராசதுரை வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'மாசிற்றி வனிதை' என்ற நாடகத்திற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் நடைபெறும் 1968-ம் ஆண்டு இலங்கை மக்களுக்கு புதியநாடகங்களையும் படங்களையும் தோற்றுவித்துத்தரும். நியுன்னதவருடமாகத் திகழும் என்றும் கலையாரவம் மிக்கவர்கள் மாத்திரமல்லாமல் எல்லோரும் ஆர்வத்துடன் இதில் ஈடுபடவேண்டும் என்றும் கூறினர்.

## நெற் காணி வரி

அராலி, திங்கள்

அராலி தெற்கு- கிழக்கு பயிர்ச்செய்கை குழு நெற்காணி வரி கட்டுவதற்கு சென்றமாதம் 31-ந்திகதி வரை காலஎல்லை குறித்து காணிச்சொந்தக்காரர், குத்தகைகாரருக்கு அறிவித்தல் அனுப்பியிருந்தது. கடைசிநேரத்தில் பலர் இவ்விப்பணத்தை கட்டியுள்ளதாக பயிர்ச் செய்கைகுழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வரித் தொகையைக் கட்டத் தவறுவதுஒருகுற்றமென்றும் நெற்காணி சட்டத்தின் பிரிவு 55 [3] ன் படி நீதிமன்றத்தில் குற்றவாளியெனக் காணப்பட்டால் 50 ரூபாவிற்கு மேற்படாத குற்றமும், அல்லது 14 நாட்களுக்கு மேற்படாத சிறையும் வரித்தொகையும் ஓர் அபராதமாக விதித்து அறவிடப்படுமெனவும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## டாக்டர் மீது விசாரணை

யாழ்ப்பாணம், செவ்

கடமைநேரங்களில் தகாத வார்த்தைகளைப் பாவிக்கும் டாக்டர் ஒருவருக்கு எதிரான பல புகார்கள் ஆஸ்பத்திரிவைத்திய அதிகாரிக்கு கிடைத்துள்ளதாம்- யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சம்பந்தப்பட்ட டாக்டர் பற்றிய விசாரணை தற்போதுநடைபெறுகிறதாகக் தெரிகின்றது

ஆஸ்பத்திரி தொலைபேசி இயக்குநராகக் கடமையாற்றும் பெண்ணொருவரை இரவுவேளையில் தகாத வார்த்தைகளில் கண்டித்ததாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்தே தற்போது குறிப்பிட்ட டாக்டர்மீது விசாரணை நடைபெறுகிறதாம். [கா.நி]

## வள்ளுவர் விழா

உடுவில், திங்கள்

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் வழமைபோல் இவ்வருடம் வள்ளுவர் விழாவை சிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றனர்.

வடமராட்சியிலுள்ள பாடசாலைகளுக்கிடையே யான பேச்சுப் போட்டிகளும், நாடகப் போட்டிகளும் இவ்விழாவில் இடம்பெறவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மேற்படி இளைஞர் முன்னேற்றக்கழக தலைவர் திரு. ந. சிவஞானம் ஈடுபட்டுள்ளார்.

## நெடுந்தீவு கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், செவ்.

நெடுந்தீவுக் கிராமசபையின் புதிய தேர்தல் இம்மாதம் 18-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இங்குள்ள 15வட்டாரங்களிலும்மொத்தம் 43 பேர் போட்டியிடுகின்றனர்.

புலோப்பளையின் கிராம சபைத்தேர்தல் இன்று 2-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. [கா.நி.]

## பொலிஸ் கான்ஸ்டபிள் தற்காலிக வேலை நீக்கம்

நல்லூர், திங்கள்

லஞ்சம் கொடுக்க மறுத்த ஒருவரைத் தாக்கியதாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## பஸ்சேவைபற்றி குறைபாடு

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணை கலைமகள் சனசமூகநிலையக்கூட்டம் தலைவர் திரு. கனகரத்தினம் தலைமையில நடைபெற்ற போது தீவுப்பகுதி பஸ் சேவைசீர்கேடு குறித்துப் பலர் கண்டனம் தெரிவித்தனர்.

தீவுப்பகுதி பஸ்சேவை சீர்கேட்டை போக்கஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென 'கலைமகள்' சனசமூக நிலையத்தினர் இ. போ. ச. அதிகாரிகளை கேட்டுள்ளனர்.

## நாவலர் பாடசாலை நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணார்பண்ணை ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை நூற்றாண்டுவிழா இம்மாதம் 7-ம் திகதிநடைபெறவிருக்கின்றன.

அன்று திரு. கனகரத்தினம் எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரமென்ற நூல் வெளியிடப்படும். காணி நீர்ப்பாசன இலாகாவின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா இவ்விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

## இடமாற்றம்

புத்தளம், திங்கள்

கடந்த 6 வருடமாகப் புத்தளம் சாந்த அந்திரேயா மகாவித்தியாலயத்தில் உடற் போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ். மரியதாஸ் கல்முனை வட்டாரக் காரியாலயத்திற்கு இம்மாதம் தொடக்கம் மாற்றலாகிச் சென்றுள்ளார்.

புத்தளம் காட்டு இலாகாப் பிரிவின் பிரதம அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. மகிந்தன, ஒலிமடுவ மாங்குளம் பிரிவுக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

° ° °

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. பொ. முருகேசு பதவி உயர்வு பெற்று கொழும்பு சென்றதைத்தொடர்ந்துகொழும்பு தேர்தல் இலாகாவைச் சேர்ந்த திரு. எஸ். என். இராஜா தற்காலிகமாக இங்கு நியமிக்கப்பட்டுள்ளார். [கா.நி]

## கல்வி அமைச்சருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்,

வடமாகாண சித்திர ஆசிரிய சங்கத்தின் புனரமைப்பு அங்குரார்ப்பணக் கூட்டம் கனகரத்தினம் மகாவித்தியாலய கலைக்கூடத்தில் நடைபெற்றது. எதிர்வரும் ஜூன் மாதத்தில் வடமாகாண சித்திர ஆசிரியர்களின் சித்திரக் கண்காட்சியொன்றை நடத்துவதென இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பல வருடங்களாக நியமனம் இன்றிருந்த சித்திர ஆசிரியர்களுக்கு அண்மையில் நியமனம் கொடுத்த கல்விமந்திரிக்கும், இதற்கு உடந்தையாக இருந்து உழைத்த ஓய்வு பெற்ற தலைமைச் சித்திர வித்தியாதரிசி திரு. வீ. மேற்படி சங்கக் காரியதரிசி திரு. எஸ். நடராசா, திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகியோருக்கும் இங்குபாராட்டுத் தெரிவிக்கப்பட்டது,

புதுவருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. க. கனகசபாபதியும், இணைக் காரியதரிசிகளாக திருவாளர்கள் எஸ். நடராசா, எஸ். சோமசுந்தரம் ஆகியோரும் பொருளாளராக திரு. எஸ். சிவப்பிரகாசமும் தெரியப்பட்டதுடன், எட்டு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரியப்பட்டது. [கா.நி]

## வெளிச்சம் இல்லை

முல்லைத்தீவு ஞாயிறு

முல்லைத்தீவு தபால் கந்தோரில் இரவு 8 மணிவரையும் வேலை நடைபெறுகிறதாயினும் வெளிச்சம் இன்றியே இயங்குகிறதாம். ஒரேஒரு பெட்ரோல்மாக்ஸ் வெளிச்சம் மட்டுமே காரியாலயத்தினுள் இருந்த போதிலும் வெளியே வெளிச்சம் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

## பிரிவினைக் கொள்கையை 'பியாவ்ரா' கைவிடவேண்டும்

### சமஷ்டி நைஜீரியத்தலைவர் கோவான் வலியுறுத்தல்

லாகோஸ், ஏப்ரல் 1

நைஜீரிய சமஷ்டித் தலைவர் ஜெனரல் கோவான், பிரிவினை 'பியாவ்ரா'வான கிழக்கு நைஜீரியாவுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதானால், அதற்கு முதற்படியாக 'பியாவ்ரா' தனது பிரிவினையைக் கைவிட்டு விடவேண்டியது அவசியமென்று கூறியுள்ளார்.

நைஜீரியாவில், சமஷ்டி நைஜீரியத் துருப்புகளுக்கும் பிரிவினைபியாவ்ரா துருப்புகளுக்குமிடையே போர்நடைபெற்று வருவது வாசகர்கள் அறிந்ததே.

சமஷ்டி நைஜீரியா, போர் நிறுத்தம் செய்தால் என்ன என்று ஜெனரல் கோவானிடம் கேட்கப்பட்டபோது, அத்தகைய போர் நிறுத்தத்துக்கும், 'பியாவ்ரா' தனது பிரிவினைக் கொள்கையை விட்டுவிடுவதென்று உறுதி கூறவேண்டுமென்று பதிலளித்தார்.

அத்தகைய உறுதிமொழி இல்லாத பட்சத்தில் 'பியாவ்ரா' தனது இராணுவத்தை மேலும் பலப்படுத்தவே போர் நிறுத்தம் உதவுமேயன்றி வேறு பயன்கிடைக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இந்திய பத்திரிகையாளர் ஏப். 23லிருந்து வேலைநிறுத்தம்

கல்கத்தா, ஏப்ரல் 1

இம்மாதம் 23-ந் திகதி தொடக்கம் காலவரையறையற்ற வேலைநிறுத்தமொன்றில் ஈடுபடுவதென அகில இந்திய பத்திரிகை ஊழியர் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

நேற்றுக் கல்கத்தாவில் முடிவுற்ற அதன் மாநாட்டிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளருக்கும் மற்றும் பத்திரிகை ஊழியர்களுக்கும் சம்பள நிர்ணய சபையினால் சிபார்சு செய்யப்பட்ட ஊதியங்கள் சம்பந்தமாகவே இவ்வேலை நிறுத்தம் கைக்கொள்ளப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிபார்சு செய்யப்பட்ட இந்த ஊதியங்களை அளிக்க சில பத்திரிகை நிறுவன முதலாளிகள் தவறியுள்ளமையிட்டு ஊழியர் சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது,

## பொலிஸில் புகார்

இணையாணன், திங்கள்

கடைக்கு முன் நிறுத்தப்பட்ட சைக்கிள் ஒன்றை, ஒரு கார் தட்டி விழுத்திவிட்டு மாயமாய் மறைந்த சம்பவம் ஒன்று நேற்றுநண்பகலில் உடுப்பிட்டி சந்தியில் நடைபெற்றது. இது பற்றி வல்வெட்டித்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## லெபனானில் கலவரம்

### இருவர் பலி

பெய்ரூட், ஏப்ரல் 1

லெபனானில், அங்கு நடைபெற்றுள்ள பார்லிமென்டரித் தேர்தல்களையடுத்துக் கலவரங்கள் நடைபெற்றுள்ளன.

இக்கலவரங்களில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். மற்றும் சிலர் காயமடைந்தனர்.

லெபனான் பிரதமர் திரு. அப்துல்லா ஜாபி, தமது மந்திரிசபை ராஜினமாச் செய்துவிட்டதென்ற செய்திகளை மறுத்துள்ளார்.

## இருள்

சங்கானை, திங்கள்

வலி-மேற்கிலே பிரபல்யமடைந்துவரும் பண்டைத்தரிப்பு மார்க்கட் கடந்த மூன்றுமாதங்களாக இருள்மயமாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. வீதிகளும் சந்தையும் இருள்மயமடைந்திருப்பதால் பொதுமக்கள் நடமாட்டத்திற்குத் தடையாகியுள்ளது.

இதுபற்றி கிராம சபையினரிடம் பொதுமக்கள் முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லையெனத் தெரியவருகிறது.

## பொது அறிவும் உள்ளூர் அறிவும்

வினாக்கள்:

1. சைப்பிரஸ் [Cyprus] நாட்டின் ஜனாதிபதி யார்?
2. எங்கட்கண்மையிலுள்ள நட்சத்திரம் யாது?
3. திவ்ய ஜீவன சங்கத்தின் [D. L. S.] ஸ்தாபக வேந்தர் யார்?
4. பொருட் கொள்வனவு ஆணையாளர் [Commissioner of Commodity Purchase] யார்?
5. இலங்கையை போத்துக்கீசருக்குப் பின் ஆண்டவர்கள் யார்?
6. இலங்கையின் தகவல் அதிபதி [Director of Information] யார்?
7. வீடமைப்பு, விஞ்ஞான ஆய்வு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி யார்?
8. இலங்கைக்கு விஜயஞ்செய்ய இருக்கும் ஆஸ்திரிக் கப்பல் யாது?
9. ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளிக் கப்பல்கள் எவ்விடத்திலிருந்து அனுப்பப்பட்டுவருகிறது?
10. இலங்கையின் சர்வதேச விமானநிலைய அமைவுக்கு உதவிஅளிக்கும் நாடு எது?
11. யேசுகிறிஸ்து பிறந்த இடம் யாது?
12. குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
13. இலங்கையில் ஜப்பான் நாட்டு தூதுவர் யார்?
14. வித்தியோதயப் பல்கலைக்கழக துணைவேந்தர் யார்?
15. நம்நாட்டு எதிர்க்கட்சித் தலைவருடைய தேர்தல் தொகுதி யாது?

[விடைகள் 7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண

# கல்லூரிகள் உடற்பயிற்சி போட்டி முடிவு

புன்னாலைக்கட்டுவன் ஞாயிறு

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் வடபிரதேசக் கல்விப்பதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற வடமாகாண கல்லூரிகள் உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள் வருமாறு;

19 வயதிற்குட்பட்ட ஆண்கள்

மல்லாகம் இந்துக் கல்லூரி யாழ். இந்துக் கல்லூரி.

16 வயதிற்குட்பட்ட ஆண்கள்

உரும்பராய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, அளவெட்டி அருணோதயா.

13 வயதிற்குட்பட்ட ஆண்கள்

சாவகச்சேரி டிறிபேக் மல்லாகம் இந்து.

19 வயதிற்குட்பட்ட பெண்கள்;

இராமநாதன் கல்லூரி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

16வயதிற்குட்பட்ட பெண்கள்:

வேம்படி மகளிர் கல்லூரி உடுப்பிட்டி மகளிர்.

13 வயதிற்குட்பட்ட பெண்கள்:

இராமநாதன், வேம்படி சுரம்பன்.

## நாவல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், செவ்.

நவாலியூர் நா. செல்வத்துரையின் "முகை மொடித்த மொட்டு" நாவல் அறிமுக விழா இம்மாதம் 4-ம் திகதி அட்டன் 'ஹைலண்ட்ஸ்' கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

திரு. ஏ. செபஸ்தியின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருவாளர்கள் மு. க. நல்லையா, முத்துசிவஞானம், ந. அ. தியாகராஜா, க. ப. சிவம். க. நி. திலகன், வண. எம். ஏ. இரத்தினராஜா, செல்வி மகேஸ்வரி கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவர். (கா. நி)

## தாராகுளம் கோஷ்டி வெற்றி

ஊர்காவற்றுறை, திங்.

யாழ்ப்பாணம் தாராக்குளம் விளையாட்டுக் கோஷ்டிக்கும் ஆரியகுளம் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் தாராக்குளம் கோஷ்டி வெற்றிபெற்றது.

## தம்பாட்டி வெற்றி

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதி எம்.பி. திரு. நவரத்தினம் வெற்றிக்கேடயத்திற்காக புளியங்கூடல் சனசமூக நிலையத்தாரால் நடத்தப்பட்டுவரும் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்து கொண்ட புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையக் கோஷ்டியை நாரந்தனை தம்பாட்டிக் கோஷ்டி தோற்கடித்தது. நடைபெற்ற மூன்று ஆட்டங்களில் முதலாம், மூன்றும் ஆட்டங்களில் தம்பாட்டிக்கோஷ்டி வெற்றி பெற்றுள்ளது.

## விண்வெளி வீரருக்கு அஞ்சலி

வெள்ளவத்தை, திங்கள்

'விஞ்ஞான ஆராய்ச்சிகளும் தொழிற்கல்வி வளர்ச்சிகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இக்காலத்தில் யூரி ககாரினைப் போன்ற தீரமிக்க விஞ்ஞானிகளின் சாதனைகள் வளரும் சமுதாயத்திற்குப் புத்துயிரையும் புது வாழ்வையும் அளிக்கின்றன. இத்தகைய பூரிப்பும் பெருமையும் அடைகின்ற வேளையில் விண்வெளிக்குச்சென்று சாதனை புரிந்த யூரி ககாரின் விமான விபத்தில் மரணம் அடைந்தது பற்றி நாம் எமது கல்லூரி மாணவர்கள் சார்பாகவும் இலங்கை மக்கள் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். எத்தனையோ விஞ்ஞானிகளைத் தோற்றுவித்து உலகுக்கு நன்மை செய்து பெருமை கொள்ளும் ரஷ்யமக்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கவும். யூரி ககாரின் சாதனைகள், புகழ் அழியாது.'

மேற்படி அனுதாபச் செய்தியொன்றினை கொழும்பிலுள்ள யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கச் சார்பில் அதன் செயலாளர் திரு. க. பேரம்பலம் இலங்கையிலுள்ள ரஷ்ய தூதரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். நிர்வாகசபைக் கூட்டத்தில் ரஷ்ய விண்வெளி வீரர் திரு. யூரி ககாரினின் மரணத்திற்காக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் மாணவர்களால் தபசுகாலத்தையும், பெரிய வெள்ளி தினத்தையும் முன்னிட்டு, இம்மாதம் 5-ம் திகதி மாலை 6-30 மணிக்கு யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி நடித்துக் காண்பிக்கப்படவிருக்கிறது.

இதற்காக விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## தகவல்சேவை அதிபர் மாற்றலாகிசெல்கிறார்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையிலுள்ள, பிரிட்டிஷ் ஹைகமிஷன் தகவல் சேவை அதிபர் திரு. பீ. டீ. பிரவுண் மாற்றலாகிச்செல்கிறார். திரு. பிரவுண் ஏப்ரல் மாதம் 2-ந் திகதி இலங்கையிலிருந்து புறப்படுவார். புதிய தகவல்சேவை அதிபராக திரு. ஜே.சி. ஈ. ஹைட் (முதல் காரியதரிசி) பதவி ஏற்பார். திரு. ஹைட் ஏப்ரல் மாதம் 21-ந் திகதி இலங்கைக்கு வருகிறார். இந்த இடைக்கால வேளையில் தகவல்சேவை இரண்டாவது காரியதரிசி திரு. ரி ஹேவி தகவல்சேவைக்குப் பொறுப்பாக இருப்பார்.

## 15-வது தடவையாக திருடினார்

ஊர்காவற்றுறை, திங்.

திருட்டுக் குற்றம் செய்து பதினைந்து தடவைகளில் சிறைவாசம் அனுபவித்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பொன்னுத்துரை என்பவருக்கு 15 வது தடவையாக திருட்டுக் குற்றத்திற்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் இரண்டு வருட பொலிஸ்கண்காணிப்பும் தண்டனையாக இடைத்துள்ளது.

ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த க. கந்தையா கைலாசபிள்ளை என்பவர் வீட்டில் ரூபா 1625 பெறுமதியான நகைகளைத் திருடியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

## புதிய உறுப்பினர்கள்

சங்கானை, திங்கள்

சங்கானை மேற்கு ஐக்கிய நாணய சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற போது பின்வருவோரைக் கொண்ட புதிய நிர்வாகசபையொன்று தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் திரு. செ. சின்னத்தம்பி, உபதலைவர்— திரு. அ. க. துரையப்பா, காரியதரிசி திரு. சி. ஆதிமூர்த்தி, உபகாரியதரிசி திரு வ. சி. இராசையா தனாதிகாரி திரு. க. சி. இரத்தினம்.

## நகை, சேலைகள் திருட்டு

வெள்ளவத்தை, திங்கள்

சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் சேலைகளும் பட்டப்பகலில் களவாடப்பட்டுவிட்ட சம்பவம் ஒன்று பாமன்கடை ஒழுங்கையில் நடைபெறுவது.

குழந்தைப்பிள்ளையைபராமரித்துக் கொண்டிருந்துவிட்டு திடீரெனக் காணாமல் போனதாகக் கூறப்படும் வேலைக்காரப் பெண் ஒருவர் இதுசம்பந்தமாகக் கைதுசெய்து பொலிஸ்பதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

விலையுயர்ந்த சேலைகளும் நகைகள் இலவற்றையும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாகத் தெரிகிறது.

## மலேரியாவைத் தடுக்க இந்தியாவும் உதவி

கொழும்பு, திங்கள்

இலங்கையில் பரவி வரும் மலேரியாவைத் தடுக்க பாரதம் உதவ முன் வந்துள்ளது. இதையொட்டி 75 தொன் டி. டி. ரி. யை பாரதம் இலங்கைக்கு கடனாக அனுப்பி வைக்கவிருக்கிறது.

## புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, திங்கள்

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்கள், காரியதரிசி ஸ்ரீ சி. வெங்கடேசசர்மா தனாதிகாரி: ஸ்ரீ எஸ். சோமாஸ்கந்தசர்மா. நிர்வாக சபையொன்றும் அமைக்கப்பட்டது.

## வயோதிபர்களின் விவாகப்பதிவு

வவனியா, திங்கள்

வவனியாவில் ஏற்கனவே மணமாகி விவாகப்பதிவு செய்யாத பலர் விவாகப் பதிவு செய்துகொள்ளுகின்றனர். 75 வயதுக்கு மேற்பட்ட பலர் சமீபத்தில் இவ்விதம் விவாகப்பதிவு செய்து கொண்டனர்.

அரசினரால் கொண்டுவரப்பட்ட இலவச திருமணப் பதிவு நடவடிக்கை காரணமாகவே இவை நடைபெற்றனவாம்.

## இடமாற்றம்

அனுராதபுரம், திங்கள்

அனுராதபுர நில அளவை கந்தோரில் உதவிப் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. சி. பாலசுப்பிரமணியம் கொழும்பு பிரதம [illegible]

வடபகுதி அசைஸ் விசாரணை

# 'எதிரி கத்தியால் குத்தியதும் நான் மயங்கிவிட்டேன்'

## அரியாலை கொலை முயற்சி வழக்கில் காயமடைந்தவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

'சம்பவம் நடந்த தினம் நான் நெசவு நிலையத்தில் வேலைசெய்துகொண்டிருந்தேன். எதிரியும், என்மனைவியும் பேசுப்படுவதாக என் மகன் வந்து கூறினார். நான் சென்று எனது மனைவியை வீட்டுக்குப் போகும்படி கூறிவிட்டு திரும்பிச் சென்றேன். அப்போது எதிரி கத்தியால் குத்தினார். அதன்பின் நான் மயங்கிவிட்டேன்.''

அரியாலை கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த பரமு கார்த்திகேசு மேற்கண்டவாறு கூறினார், இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் ஏச், டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் 66-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ந் தேதி அரியாலையில் பரமு கார்த்திகேசு என்பவரை, நாகமுத்து சின்னத்துரை என்பவர் கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர்களான ஆர். விஸ்வநாதன், வி. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சுனில் டீ, சில்வா ஆஜரானார்.

எதிரியின் வழக்கறிஞரான அட்வகேட் சண்முகநாதன் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்

வழ: உமது மனைவியை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, திரும்பிப்போக எதிரி வந்து குத்தினார் என்கிறீரா?—குத்தாமல் எப்படி காயம் வந்தது? [சிரிப்பு].

வழ: பொலிஸ் முறைப்பாட்டில் மனைவியை ஏன் பேசியதாக எதிரியிடம்கேட்டதாக சொன்னீரா? ஞாபகமில்லை.

நீதியரசர்: அப்படி சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது? - ஞாபகமில்லை.

நீதி: ஞாபகத்திற்குத்தான், அதை ஞாபகமூட்டுகிறோம்.- சொல்லியிருப்பேன்.

நீதி: சொல்லியிருந்தால் அது உண்மையா?— ஆம்.

வழ: உன்மனைவி எதிரியை பேசினாரா?—இல்லை.

நீதி: பெண்கள் பலிசை ஆரம்பித்தால், இலகுவில் முடிக்கமாட்டார்கள். உன் மனைவி பேசவில்லையா? எனக்குக் கேட்கவில்லை.

வழ: கீழ்க்கோட்டில்வேறு ஆட்களும் ரோட்டில் நின்றதாக கூறினீரே—இல்லை.

நீதி: கீழ்கோர்ட்டு நீதவான் அப்படி எழுதியிருக்கிறாரே? — எழுதினால் நம்பத்தானே வேணும்.

வழ: அது உண்மை?. ஆம்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். முஸ்லிம் வட்டார கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் தனது 5வது ஆண்டு நிறைவு விழாவை இம்மாதம் 5ம் திகதி நடாத்தவிருக்கிறது.

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்:

1. ஆச்பிஷப் மக்காறியஸ் [Archbishop Makarios].
2. சூரியன்.
3. சுவாமி சிவானந்த யோகிராஜ்.
4. திரு. ஏ. எஸ். நவரத்தினராசா [A. S. Navaratnarajah].
5. ஒல்லாந்தர்.
6. திரு. பி என். மெடகொட P. N. Meddegoda.
7. திரு. டபிள்யூ. டி. பி. மஹாதந்தஸ்தில. [W. D. B. Mahatantilla].
8. ஹோப். [Hope].
9. கென்னடிமுனை [Cape Kennedy].
10. கனடா [Canada].
11. பெத்லகெம் நகரில்.
12. வில்லியம் ஹாவே [William Harvey].
13. திரு. சீஸ்ஸோ ஹினாற்று [Seizo Hinata].
14. டாக்டர். வால்பொல ரகுலா [Dr. Walpola Rahula].
15. அத்தனகலை [Attanagala].

(அடுத்த மாதிரி வினாவிடைகள் 9-4-68 இல் வெளிவரும்)

வியர்வை நாற்றம்
வியர்வைப் பருக்கள்
இவற்றை நீக்கி
உடம்புக்கு சுகந்த பரிமளம் கொடுப்பது
"சூரிய மார்க்"
வாசனை சந்தனப் பவுடர்
ஸ்நானத்துக்குப் பின்பு உடம்பில் நன்கு
பூசிக்கொள்ள உகந்தது
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
கோவில் அபிஷேகப் பொருட்கள்
[illegible] சரக்கு விற்பனையாளர்
(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை. இளைஞன் கொலை வழக்கு; கைரேகை நிபுணர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, திங் வல்வெட்டித்துறை இளைஞர் ஆர். சிவஞானசுந்தரத்தின் கொலைவழக்கு இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது கொழும்பு கைரேகை நிபுணர் திரு. ஜி. ஏ. ஸி. சிறிமானே என்பவர் எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. ஜோர்ஜ் சந்தப்பாவினல் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். அப்பொழுது அவர் கூறியதாவது:

"சம்பவம் நடைபெற்ற இடத்தின் மதில் சுவர்களில் துப்பாக்கிக் குண்டுகளின் அடையாளங்கள் காணப்பட்டன. தெருவின் மட்டத்துடனும், தெருவின் நேர்ப்பாதையின் ஊடாக ஓரளவு உயரத்தில் மதில் மேல் குண்டுகள் பாய்ந்திருந்தன. இம் மதில் சுவர் வல்வெட்டித்துறைச் சந்தியிலுள்ள காங்கேசன்துறை வீதியை நோக்கிச் சமாந்தரமாகவுள்ளது. துப்பாக்கிச் சூடு காங்கேசன்துறை வீதியில் ஒரு தொலைவிலிருந்து சுடப்பட்டிருக்கலாம்."

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆர். சிவஞானசுந்தரம் என்னும் இளைஞரைக் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 8ந் தேதி பொலிஸ் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகவும், அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். .சி பத்திரான மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் வழக்கறிஞர் ஜோர்ஜ் சந்தப்பாபுறக்டர் ஜி. பரணகிட்டியின் அனுசரணையுடன் ஆஜரானர் வழக்காளி தரப்பில், சிரேஷ்டவழக்கறிஞர் ஜி ஜி. பொன்னம்பலம் கியூ. சி., வழக்கறிஞர் என். சிவஞானசுந்தரம், அட்வகேட் கே. மோதிலால்நேரு ஆகியோரின் உதவியுடனும் புறக்டர் கே. இரத்தினசிங்கம், புறக்டர் என். நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

விசாரணையைப் பார்ப்பதற்கு பெண்களுட்படகோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர். கைரேகை நிபுணர் தொடர்ந்து கூறியதாவது:

சனசமூக நிலையத்திற்கு முன் ஒரு அரைச் சுவர் உண்டு. நான்சம்பவம் நடைபெற்ற முழு இடத்தையும் பார்வையிட்டபோது துப்பாக்கிச்சூடு மண் தரையிலும்காணக்கூடியதாக இருந்தது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 10-ந் திகதி சம்பவம் நடந்த இடத்திற்கு பிற்பகல் போனேன். சம்பவம் நடைபெற்ற இரண்டாம் நாள் அவ்விடத்தைப் பார்வையிட்டபோது துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் இருக்குமென நான் எதிர்பார்க்கவில்லை. சம்பவம் நடைபெற்ற வளவுக்குள் உள்ள மரம் ஒரு மனிதனுடைய உயரத்திற்கு மேலாகவுள்ளது. மாணிக்கத்தியாகராசாவின் கடையிலும் துப்பாக்கிச்சூட்டு அடையாளம் இருந்தது. அதே சந்தியிலுள்ள ஒரு சுவரிலும் துப்பாக்கிக்குண்டு அடையாளம் காணப்பட்டது.

துப்பாக்கி அடையாளங்கள் எத்தகைய குண்டுகளை பாவித்தார்களென என்னல் கூறமுடியாது. பொலிஸ் ஜீப், ஒரு இராணுவ ஜீப் வண்டிகளையும் பரிசோதித்தேன்.

களைத்தவிர வேறுவாகனங்களை நான் பார்வையிடவில்லை. தண்டில் உடைந்த பகுதிகளில் உலோகத்துண்டுகளும் ஒரு அலுமினியத்துண்டும் நிக்கல் துண்டுகளும் இருந்தன. எதிரியின் உத்தியோக உடுப்பில் 14 குண்டுபட்ட அடையாளம் இருந்தது.

மேல்விசாரணையை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் இம்மாதம் 7ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## சமயம்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வன் ஒருவனுண்டு என நாம் ஞானநிலையினை அடைந்தாலேயே காணமுடியும். அந்நிலையினையடைய படிப்படியான வழிபாட்டு முறைகளைக் கொண்டு மெய்ஞ்ஞானத்தினைப் பெற வேண்டும். விஞ்ஞானத்தினல் சொல்லி விளக்க முடியாத எத்தனையோவற்றை மெய்ஞ்ஞான நூல்களாகிய திருவாசகமும் சிவஞானபோதமும் ஏனைய சமய நூல்களும் அளிக்கின்றன. அத்தகைய நூல்களை நாடித் தேடிப்பெற்று மெய்ஞ்ஞான அறிவினை வளர்த்து நாம் இப்பூவுலக வாழ்வினை மேம்படுத்திக் கொள்ளுதல் அவசியம்.

ஒளித்தத்துவ ஆராய்ச்சியில் நிரந்தர பரிகார ஒழுங்குகளை விஞ்ஞானி எவ்வாறு நிலைநிறுத்த முயன்ருனே அதே மாதிரி மெய்ஞான நிலையினை வளர்த்து சமயம் என்பது நிரந்தரமானது-வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இரண்டறக் கலந்தது என்பதனை நாம் உணரவேண்டும்

ஆயிரமாயிரம் செலவழித்துக் கும்பாபிஷேகம் நடத்துவதோ திருவிழா எடுப்பதோ கேலிக்கூத்துக்கிடமானது. மனித உணர்ச்சிகளுக்கு இடந்தராது மனதினை ஒரு வழிப் படுத்திஇறையடிபணிவதே சிறந்த உன்னத வழிபாடாகும். பெரிய அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் 'சமயம் என்று கூறிக்கொள்கைகளைப் பிரிவுபடுத்தி நம்பிக்கையை அற்றுப் போகச் செய்யும் சகல நடவடிக்கைகளையும் கண்டித்து, சமயம் என்று கூறுவதை விடுத்து 'இறைவன்' 'இறைவனடி' என்று கூறப்படவேண்டுமென்ருர் இதுவே அவர்கள் விரும்பும் கொள்கை. எந்தவொரு கொள்கையுமின்றி நடக்கத் தலைப்பட்டுப் பலர் நரம்புத் தளர்ச்சி, இருதய நோய் முதலியவற்ருல் வருந்துவதை நாமுணர்ந்து சிறந்த முறையில் இறைவனை வழிபட்டு வாழ்வோமாக.

செயலாளர் திரு. ஆ. தம்பிப்பிள்ளை நன்றியுரை கூறினர்.

## எதிரிக்கு 4 வருட சிறை

யாழ்ப்பாணம், செவ்.

அரியாலை கொலை முயற்சி வழக்கில், எதிரிக்கு நான்கு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

ஜுரிசபையினர் ஏகமனதாக, எதிரி கைமோசக் கொலைமுயற்சி குற்றத்திற்கு குற்றவாளியெனத் தீர்ப்பளித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் நேற்றுப்பிற்பகல் தீர்ப்பு வழங்கினர்.

# பெண் மர்ம மரணம்
## மாமி, மாமன், மைத்துனர்கள் கைது

நல்லூர், திங்கள்

மூன்று தினங்களாக தனது மகளை அறை ஒன்றிற்குள் பூட்டி வைத்து சித்திரவதை செய்கிருர்களென்று இன்று காலை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டனுக்குப் புகார் செய்த சில நிமிட நேரங்களுக்குள் குறிப்பிட்ட பெண் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானுராம். பொலிஸ் அதிபரிடம் புகார் செய்துவிட்டு அவ்விடத்தைவிட்டு வெளியேறுவதற்கு முன்னரே மகளின் மரணச் செய்தி தந்தைக்கு எட்டியது. இம்மரணம் குறித்து மாமனர், மாமியார், மைத்துனர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் கூழாவடியைச் சேர்ந்த திருமணமான அழகிய இளம் பெண் மகேஸ்வரி கந்தசாமியின் மரணம் சம்பந்தமாக சுந்தரி கணபதிப்பிள்ளை, மாமனர் கணபதிப்பிள்ளை, மைத்துனர்கள் கனகசபை, கனகரத்தினம் ஆகியோரே இன்று ஆனைக்கோட்டைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் கந்தசாமி என்பவரின் மனைவியான மகேஸ்வரி என்ற இந்த இளம் பெண் இன்றுகாலைநஞ்சு குடித்துவிட்டதாகஅனுமதித்துபத்து நிமிடங்களில் இறந்துவிட்டாராம்.

இம்மரணம் குறித்து மானிப்பாய் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு சேனாதிராசா மரணவிசாரணை நடத்தினர்.

காலஞ்சென்றவரின் தந்தையார் சடையன் எபவர் சாட்சியமளிக்கையில், தனது மகளை தன்னுடன் விடுமாறு மூன்று தினங்களுக்கு முன் மகளின் மாமனர், மைத்துனர்களை கேட்டதாகவும், அவர்கள் கணவர் கொழும்பிலிருந்து வராமல் விடமாட்டோம் என்று சொன்னதாகவும் தெரிவித்தார்.

தனது மகளை கணவர் வீட்டார் பெருத்த கஷ்டப்படுத்துகிருர்களென்று இறந்த மகள் தனக்கு எழுதிய கடிதத்தை சமர்ப்பித்து ஆனைக்கோட்டை பொலிஸில் மூன்று தினங்களுக்கு முன்னர் இறந்தவரின் தந்தையார் புகார் ஒன்று செய்தாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சாட்சியங்களை விசாரணை செய்த பின்னர் மரண விசாரணை அதிகாரி இந்த மரணம் சம்பந்தமான தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். இம்மரணத்தில் மர்மம் இருப்பதாகத் தெரிவித்து பொலிஸாரை இது சம்பந்தமாகப் புலன் விசாரணை செய்யுமாறு மரண விசாரணை அதிகாரி ஆனைக்கோட்டை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இறந்தவரின் உள்ளுறுப்புக்கள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

## எம். ஜி. ஆருக்கு 16 அடி மாலை!

யாழ்ப்பாணம், செவ்.

நடிகர் எம். ஜி. ஆருக்கு 16 அடி மாலையொன்றை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது ரசிகர்கள் அணிவித்திருக்கிருர்கள். யாழ்ப்பாண்ம் ராஜா தியேட்டரில் இன்று 'காவல்காரன்' 100-வது தினமாக திரையிடப்படுவதை முன்னிட்டு ராஜா தியேட்டரின் முகப்பில் நிர்மானிக்கப் பட்டுள்ள பெரிய எம். ஜி. ஆர். உருவத்துக்கே இந்த மாலையை அணிவித்திருக்கிருர்கள்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் 10-ம் திருவிழாவாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணிவரை நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் "வாலி மோட்க்ஷம்" என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும், பின் சந்திர சேகரருக்குப் பட்டங்கட்டுதலும், பின் சுவாமி வெளி வீதி வலம வருதலும் இரவு 10 மணிக்கு அர்த்த ஜாமப் பூஜையும் நிகழும்.

## திருவிழா

யாழ்ப்பாணம், சனி

அரியாலை நீர்கொச்சித் தாள்வின் ஸ்ரீ தியாகேசப் பெருமான் கோவிலிலும் இராசேஸ்வரி அம்பாள் கோவிலிலும் திருவிழா இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் இம்மாதம் 11-ம் திகதி ரதஉற்சவமும் 12-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெற்று விழா முடிவடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [வி. நி]

## மகரகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சொக்குவில் மஞ்சவனப்பதி கந்தசுவாமிகோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளைக் காலை 8-39 மணிசகும் 10-39 மணிக்குமிடையில் நடைபெறும். பகல் அன்னதானமும் நடைபெறும். இரவு சுவாமி வீதிவலம் வரும்.

## நீதி விசாரணைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வோர் அவ்விதம் சாட்சியமளிக்க முன்வரலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், சேலத்தில் மாணவர் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு பேசுகையில், மாணவர்—பஸ் தொழிலாளர் கைகலப்புச் சம்பவங்கள் பற்றி நீதி விசாரணைமட்டும் நடத்தினல் போதாதென்றும், பொது விசாரணையொன்று பகிரங்கமாக நடத்தப்பட வேண்டுமென்றும்காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் கருத்து வெளியிட்டுள்ளார். நீதி விசாரணையில் சாட்சியமளிப்போருக்குப் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினுர்.

## விசுவமடு
# விவசாய படைமுகாமில் மலேரியா பரவுகிறது
## ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் கைக்கடிகாரம்ஒப்படைத்து திரும்பினராம்

யாழ்ப்பாணம், செவ்.

வடமாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விசுவமடு விவசாயப்படை முகாமிலுள்ள பல வாலிபர்களுக்கு மலேரியா பரவியுள்ளதாகத் தெரியவருகிறது. பலர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போதிலும் இந்த ஆஸ்பத்திரியில் நிலவியுள்ள இட நெருக்கடி காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டதாகவும், இவ்விதம் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் முகாமுக்கு திரும்புவதற்கு முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் எவ்வித ஒழுங்குகளும்செய்யாததால் பெரும் அவதிக்குள்ளாகியதாகவும், மிகுந்த கஷ்டத்தின் பின் முகாமுக்குத் திரும்பியதாகவும் தெரிகிறது.

இட நெருக்கடி காரணமாக இவ்விதம் ஆஸ்பத்திரியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஒருவர் தமது கைக்கடிகாரத்தை பொறுப்பாகக் கொடுத்து வான் ஒன்றை ஒழுங்குசெய்து முகாமைச் சேர்ந்த மற்றவர்களையும் ஆஸ்பத்திரியிலிருந்து முகாமுக்கு அழைத்து சேர்த்ததாக அறியப்படுகிறது. [illegible] பணத்தை முகாம் அதிகாரியிடம் ஆஸ்பத்திரியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர் கேட்டபோது அதிகாரி இவற்றுக்கெல்லாம் பணம் கொடுக்க முடியாதெனக் கைவிரித்தாராம்.

### மலேரியா பரவியதற்கு காரணம்

இந்த முகாமில் நிலவிவரும் சுகாதாரக் குறைவே இங்கு நோய்பரவுவதற்குக் காரணமெனவும், உணவு, நீர் ஆகியவற்றில் சுகாதார முறை அனுசரிக்கப்படாதது முக்கிய குறைபாடெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணிவகுப்புகளிலும் மற்றக் கட்டுப்பாடுகளிலும் செலுத்தப்படும் கவனம் இங்கு வாழும் விவசாய வீரர்களின் சுகாதாரம், உணவு ஆகிய விஷயங்களில் செலுத்தப்படுவதில்லையெனவும் குறை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேரியா பீடிக்கப்பட்டிருந்தாலும் இந்த முகாமைச் சேர்ந்தவர்கள் வெளியே போகக்கூடாதென்ற கடும் கட்டுப்பாடு இருந்துவருவதால் சிலர் ராஜினமா செய்துவிட்டு வெளியேறியுள்ளார்களாம்.

இவை சம்பந்தமாக விவசாயப்படை வீரர்கள் தமது எம். பி.க்களிடம் புகார்செய்ய முடிவுசெய்துள்ளனராம். (வி. நி.)

## வேலைநிறுத்த நிலைமை

கொழும்பு, திங்கள்

இன்று ஆரம்பிக்கப்பட்ட வர்த்தகஊழியர் சங்கத்தின் பொதுவேலை நிறுத்தத்தில் 32,000 பேர் அங்கம்வகிக்கும் இலங்கை வர்த்தக ஊழியர்சங்கள் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 20,000 பேர் குதித்தார்கள்.

நேற்றிரவு நடந்த சங்க பொதுச்சபைக் கூட்டத்தில் வேலைநிறுத்தம் செய்வதென முடிவு எடுக்கப்பட்டது. இந்த வேலைநிறுத்தத்தையொட்டி பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தை நடாத்த தான் எப்பொழுதும் தயார்என்று வர்த்தகஊழியர்சங் பொதுக்காரியதரிசி திரு. பாலா தம்பு தெரிவித்தார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தொனைத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அச்[illegible] பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org